விச்வாவஸு ஹூ ஆவணி மீ
ஆகஸ்ட் - செப்டம்பர் 2025

மலர்: 8
இதழ்: 5

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்

விச்வாவஸு ௵ ஆவணி ௴
ஆகஸ்ட் - செப்டம்பர் 2025

ஸ்ரீ:

மலர்: 8
இதழ்: 5

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

மங்களகரமான இந்த விச்வாவஸு ஆண்டின் ஆவணி மாதத்திற்கான அதிஷ்டான தேவதையாக திகழ்கிறான் ஸ்ரீதரன்.

எவ்வளவு அனுபவித்தாலும் தெவிட்டாத அமுதமாகவுள்ளவனும், அத்திமாமலைமேல் நின்ற அடியவர்களைக் கைவிடாதவனுமான பேரருளாளன், ‘சிறப்பு நிறைந்த சிரீதரனாய் சிவனுடைய திசையாகிய வடகிழக்கையும் இடது புஜத்தையும் அழகு பொருந்திய ஸ்தாநமாகக் கொண்டு, ப்ரகாசிக்கின்ற வெண்மையான தாமரையின் நிறமுடையவனாய், பட்டயம் என்னும் ஒருவகை பருத்த வாள்கள் நான்கினாலும் என் பயத்தைப் போக்குவான்’ என்று ஸ்வாமி போற்றுகிறார்.

‘(வேணுகோபாலனின்) உதட்டில் வைக்கப்பட்ட அழகிய வேய்ங்குழல், திருமுடியில் தொங்கிக் கொண்டிருக்கிற மயில் இறகுகளின் வரிசை, இந்த்ர நீலக்கல்லின் நிறம் இவற்றைப் பற்றிய எண்ணங்கள், என்னுடைய கடைசி யாத்ரை ஸமயத்தில் இருக்க வேண்டும்’ என்று ஸ்வாமி தேசிகன் கண்ணனின் திருமேனியின் அழகை தன் அந்திம திசையில் ஸேவிக்க வேணும் என்று விழைகிறார். அந்தக் கண்ணனின் திருஅவதார தினமான ஸ்ரீஜயந்தியை இந்த ஆவணியில் கொண்டாடவுள்ளோம்.

‘ஸகல தத்வ ஜ்ஞாநங்களுக்கும் வித்தாகவும், வேத வ்ருக்ஷத்துக்கு வேராகவும் உள்ள அகர முதல எழுத்தெல்லாம் உன் வடிவங்களே. வேதாந்த விற்பன்னர்கள் எல்லாச் சொற்களும் அந்த அந்தப் பொருள்களோடு போகாமல் உன்னளவும் வருவனவாகவே குறிப்பிடுவர்’ என்று ஸ்வாமி தேசிகனினால் போற்றப்பட்ட பரிமுகப்பெருமாளின் அவதார தினம் ஆவணி திருவோணத்தில் கொண்டாடப்படவுள்ளது.

கண்ணனின் அவதார தினமான ஆவணி ரோஹிணியில் அவதரித்தவர் வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை. ஆழ்வார்களின் ஈரச்சொற்களான நாலயிர திவ்யப்ரந்தம் முழுவதற்கும் முதன்முதலில் உரை எழுதியவர் இந்த மஹான். ஆழ்வார்களின் பாசுரப்படி ராமாயணத்திற்க்கும் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்களுக்கும் மிகவும் ரஸனையுடன் உரை எழுதிய பெருமை இந்த பூர்வாசார்யரைச் சேரும்.

இந்த ஆவணி ஹஸ்தத்தில், ஆசார்ய வள்ளல் ஸ்வாமி தேசிகனைப் போற்றும் ‘ராமானுஜ தயாபாத்ரம்’ எனும் தனியன் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியினால் அருளுப்பட்டது. ஸ்வாமி தேசிகனின் குமாரர் நயினாராசார்யர் இந்த மாதம் ரோஹிணியில் அவதரித்தவர். பிது: சதகுணம் புத்ரா: என்னும் படிக்கு இவர் ஸ்வாமியைப் போன்றே அதிகரண சிந்தாமணி, விரோத பரிஹாரத்திற்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்யனம், ஸ்வாமியைப் பற்றின பிள்ளையந்தாதி, தேசிக மங்களம், ஸ்ரீமத் வேதாந்த தேசிக விக்ரஹ த்யானம், ஸ்ரீ தேசிக தினசர்யா, ஸ்ரீ தேசிக ப்ரபத்தி, ஸ்ரீ தேசிக ப்ரார்த்தனாஷ்டகம் ஆகிய அனேக க்ரந்தங்களை ஸாதித்துள்ளார்.

இப்பெருமைகளைக் கொண்ட ஆவணி மாதத்தின் தேசிக சந்தேசம் இதழ், ஆடி உத்ஸவங்களின் வண்ணப் படங்கள், விசேஷ வ்யாஸங்கள் மற்றும் வழக்கமான ஆங்கிலத் தொடர்கள் இவற்றைத் தாங்கி உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# Let Us Join Hands For Consecration Project

## FROM THE DESK OF TRUSTEES



With the divine grace of Sri Srinivasa Perumal and the benign blessings of Swami Sri Vedantha Desika, the sacred month of Aadi was observed with deep devotion and grandeur at our Devasthanam.

The month's celebrations included the **Annual Jyeshtabhishekam** for Sri Srinivasa Perumal and Sri Alarmelmangai Thayar, performed with Vedic chanting and rituals strictly in accordance with Agamic traditions, invoking prosperity and divine protection for all devotees.

The auspicious **Gajendra Moksham Utsavam (Aadi Garudan),** commemorating the boundless compassion of Lord Vishnu in granting refuge to His devotees, and the Thiru Aadi-Pooram Utsavam, the Avathara Utsavam of Andal, were celebrated with grandeur. The enthusiastic participation of devotees in these events reflected the depth of bhakti and the spirit of unity within our temple community.

As we now step into the holy month of Avani, the Devasthanam is invigorated with renewed fervour. Avani holds special significance for our temple, featuring **Sri Hayagriva Jayanthi** and **Sri Jayanthi** celebrations, along with the commencement of various religious observances and Veda Parayanams. The cool climate following Aadi and the sacred festivals of this month create an atmosphere most conducive to worship, learning, and spiritual contemplation.

Looking ahead, we eagerly anticipate the **forthcoming Samprokshanam** (consecration) of our temple — an occasion of profound sanctity, during which the divine energies of our deities will be ceremoniously re-invoked. This once-in-several-years event is a blessing to behold and participate in. We earnestly invite all devotees to take part in this sacred ceremony, extend their contributions in every possible manner, and receive the abundant grace of our Lord and Acharya.

May the blessings of Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal and Swami Sri Vedantha Desika ever be upon you and your families.

ஸ்ரீ:

# விச்வாவஸு வருட ஆவணி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் / ஸெப்டம்பர் | ஆவணி | | | | | |
| | | | | | | |
| 17.08.2025 | 1 | நவமி | ஞாயிறு | க்ருத்திகை / ரோஹிணி | திருமங்கையாழ்வார் | |
| 18.08.2025 | 2 | தசமி | திங்கள் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 19.08.2025 | 3 | ஏகாதசி | செவ்வாய் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 20.08.2025 | 4 | த்வாதசி | புதன் | புனர்வஸு | குலசேகராழ்வார் | |
| 21.08.2025 | 5 | த்ரயோதசி | வியாழன் | பூஷ்யம் | திருமால்வடை | |
| 22.08.2025 | 6 | சதுர்தசி / அமாவாசை | வெள்ளி | ஆயில்யம் | திருமால்வடை | |
| 23.08.2025 | 7 | அமாவாசை / ப்ரதமை | சனி | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 24.08.2025 | 8 | ப்ரதமை / த்விதீயை | ஞாயிறு | பூரம் | ஆண்டாள் | |
| 25.08.2025 | 9 | த்விதீயை / த்ருதீயை | திங்கள் | உத்திரம் | தாயார் | |
| 26.08.2025 | 10 | த்ருதீயை | செவ்வாய் | ஹஸ்தம் | ராமாநுஜ தயாபத்ரம் தனியன் திரு அவதார உத்ஸவம். மாலை தேசிகன் ஆஸ்தானம் | வேதபாராயண ஸபா |
| 27.08.2025 | 11 | சதுர்த்தி | புதன் | ஹஸ்தம் / சித்திரை | கூரத்தாழ்வான் | |
| 28.08.2025 | 12 | பஞ்சமி | வியாழன் | சித்திரை / ஸ்வாதி | மதுரகவிகள் | |
| 29.08.2025 | 13 | ஷஷ்டி | வெள்ளி | ஸ்வாதி | பெரியாழ்வார் | |
| 30.08.2025 | 14 | ஸப்தமி | சனி | விசாகம் | நம்மாழ்வார் | |
| 31.08.2025 | 15 | அஷ்டமி | ஞாயிறு | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 01.09.2025 | 16 | நவமி | திங்கள் | கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார் | |
| 02.09.2025 | 17 | தசமி | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 03.09.2025 | 18 | ஏகாதசி | புதன் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 04.09.2025 | 19 | த்வாதசி | வியாழன் | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 05.09.2025 | 20 | த்ரயோதசி | வெள்ளி | ச்ரவணம் | ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி. காலை ஹயக்ரீவர், தேசிகன் திருமஞ்சனம். மாலை தேசிகன் வீதிப் புறப்பாடு. ஹயக்ரீவர் ஆஸ்தானம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர். ஹயக்ரீவ ஜயந்தி: ஸ்ரீ R. வாஸுதேவன் குடும்பத்தினர் |
| 06.09.2025 | 25 | சதுர்தசி | சனி | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07.09.2025 | 22 | பௌர்ணமி | ஞாயிறு | சதயம் | பேயாழ்வார் | |
| 08.09.2025 | 23 | ப்ரதமை | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 09.09.2025 | 24 | த்விதீயை | செவ்வாய் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 10.09.2025 | 25 | த்ருதீயை | புதன் | ரேவதி | திருமால்வடை | |
| 11.09.2025 | 26 | சதுர்த்தி | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 12.09.2025 | 27 | பஞ்சமி / ஷஷ்டி | வெள்ளி | பரணி | தாயார் | |
| 13.09.2025 | 28 | ஷஷ்டி / ஸப்தமி | சனி | கிருத்திகை | கலியன் | |
| 14.09.2025 | 29 | ஸப்தமி / அஷ்டமி | ஞாயிறு | ரோஹிணி | முனித்ரய ஸ்ரீஜயந்தி | |
| 15.09.2025 | 30 | அஷ்டமி / நவமி | திங்கள் | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீபாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி. மாலை கண்ணன் திருமஞ்சனம், ஆஸ்தானம் | ஸ்ரீ S. வீரராகவன் |
| 16.09.2025 | 31 | தசமி | செவ்வாய் | திருவாதிரை / புனர்வஸு | மாலை உறியடி உத்ஸவம். பெருமாள், கண்ணன் வீதி புறப்பாடு | ஸ்ரீ S. வீரராகவன் |

## வைணவ வழக்குச் சொற்கள் ⑫

**திருவத்யயனம்:** திவசம், ச்ராத்தம்

**தில்லை:** சுரபுன்னை மரம்; Mangrove

**திருமஞ்சனம்:** நீராடல், நீராட்டல், அபிஷேகம்

**திருநாடு எழுந்தருளல்:** அமரராதல் (இறப்பு)

**திருவுள்ளம் பற்றுதல்:** எண்ணுதல், சிந்தித்தல், மனத்தில் கொள்ளல்

**திருக்கண்ணமுது:** திருக்கன்னலமுது, பாயசம் (கன்னல் = கரும்பு, சர்க்கரை); ஆகுபெயராக இனிப்பு

**திருவடி நிலை:** காலணி, பாதரக்ஷை, பாதுகை

**திருப்பள்ளிப் படுத்தல்:** பெரியோரை அடக்கம் செய்தல்

**திருப்பள்ளி எழுச்சி:** இறைவன் துயில் கலைதல்

**திருப்பள்ளி எழுச்சி ஸேவித்தல்:** ஸுப்ரபாதம் கூறுதல்

**திருவரசு:** பெரியோர்களுடைய, யதிகளுடைய ஸமாதி, அதிஷ்டானம்

**திருவாராதனம்:** ஸந்நிதியில் நிகழும் நித்யக்ரம பூஜை

**திருமடைப்பள்ளி:** கோயிலிலோ வீட்டிலோ உள்ள சமையற்கட்டு

**திருவலகிடுகை:** சுத்தப்படுத்திப் பெருக்குதல்

**திருவிளக்கு:** ஸந்நிதி தீவட்டி, பெருமாள் எதிரே உள்ள தீபம்

**திருமாளிகை:** மற்றவருடைய இல்லம், வீடு

**திருமந்திரம்:** ஓம் நமோ நாராயணாய (ரஹஸ்யத்தில் முதலாவது)

**திவம்:** பரமபதம்

திருமாலின் பஞ்சாயுதம், மாலை இவற்றின் பெயர்கள்:

**பஞ்சாயுதம்:** (a) கௌமோதகீ - கதை;
(b) சார்ங்கம் - வில்; (c) ஸுதர்சனம் - சக்ரம்;
(d) பாஞ்சஜன்யம் - சங்கு; (e) நந்தகம் - வாள், கத்தி

**மாலை:** வனமாலை – வைஜயந்தி

**திருமுப்பாறுதல்:** தாளித்துக்கொட்டுதல்

**திருமுன்:** ஸந்நிதி

**திருமுற்றம்:** கோயில்

**திருச்சுற்று:** ப்ராகாரம்

**திருமுகம்:** கடிதம், தாக்கீது, செய்தி அடங்கிய ஓலை; message

**திருவடி நிலை:** பாதுகை

**திரள்:** சமுதாயம்

**திரட்சி:** பருவமடைதல், பால்யவிவாஹமான பெண் பருவமடையும் வைபவம்

**திருப்பாவாடை:** (பாவாடை விரித்ததுணி) பாவாடை போட்டு வினியோகம் செய்யும் ப்ரஸாதம்

**திருநாடு:** பரமபதம்

**திருக்கைத்தலம்:** பெருமாளைக் கையில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு உலாவரும் ஸேவை

**திருக்குறிப்பு:** மனத்தில் ஓடும் நினைப்பு, திருவுள்ளம்

**திகிரி:** சக்ரம்

**திரிகை:** சக்ரம்

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

*(தொடரும்...)*

ஸ்ரீ:

# ஸ்ரீதேசிகன் கட்டின பரமபதப் படிகள் ஒன்பது

44-ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கரின் அருள்மொழிகளிலிருந்து

**விவேகநிர்வேதவிரக்திபீதய:**
**ப்ரஸாதஹேது-உத்க்ரமண-அர்ச்சிராதிகா: ।**
**ப்ரக்ருத்யதிக்ராந்தபதாதிரோஹணம்**
**பராப்தி: இதி அத்ர து பவர்ணாம் க்ரம: ॥**

இவ்வுலகில் பிறந்திருக்கிற ஆண்கள், பெண்கள் யாவரும் செய்ய வேண்டிய முக்யமான கார்யம் ஒன்று உண்டு. அது எது என்றால், ஐந்து நிமிஷம் தனியாக உட்கார்ந்து கொண்டு யோசனை செய்ய வேண்டியது தான். சிலர், 'நாங்கள் எப்பொழுதும் யோசனை பண்ணிக்கொண்டு தான் இருக்கிறோம். நீங்கள் இப்பொழுது எதைப்பற்றி யோசனை செய்யச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்பார்கள். நான் சொல்லப்போவது, 'நீங்கள் இரவு பகலாக இதுவரையில் எதை எதையோ நினைத்துக்கொண்டிருந்து அவை கைக்குக் கிடைக்காமல் வருந்துகிறீர்களே, அவற்றைப் பற்றியதல்ல. கொஞ்சம் அவசரப் படாமலும் பொறுமையுடனும் கேளுங்கள். நான் சொல்லுகிறபடியே யோசனை பண்ணுங்கள். அதனால் ஸகல வித க்ஷேமங்களையும் அடையலாம்.

தனியாக ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு, 'இந்த மானிடப் பிறவி அடைந்திருப்பதற்கு முக்யமாக நாம் செய்ய வேண்டிய கார்யம் எது? இந்த மனிதப் பிறவி எடுத்ததற்கு முக்ய பலன் என்ன?' என்பதைப் பற்றி ஐந்து நிமிஷங்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள். முடிவில் ஒரு தீர்மானம் பண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது இவ்வுலகிலும், சாஸ்த்ரத்தால் அறிந்த மேல் கீழ் உள்ள உலகங்களிலும், நாம் கண்ணாலே பார்ப்பவையாகவும், காதாலே கேட்பவையாகவும், மனத்தினால் நினைப்பவையாகவும், அநுபவத்தில் இருப்பவையாகவும் உள்ள ஸகல போக போக்யங்கள் எல்லாம் மின்னல்கள் போலவும் நீர்மேல் குமிழி போலவும் கண்களை மூடித் திறப்பதற்குள்ளே அழிந்து போகக்கூடியவை; என்றும் கஷ்டங்களை விளைவிக்கக் கூடியவை. இவ்வுலகில் உள்ள பெரிய பெரிய பதவிகளையும், அவற்றினால் ஏற்படுகிற கஷ்டங்களையும், ஒவ்வொரு குடும்பத்திலும் படுகிற கஷ்டங்களையும் நன்றாக நினைத்துப் பாருங்கள். இவை யாவும் நம் பிறவிப் பயனாகா என்ற தீர்மானத்துக்கு வந்துவிடுவீர்கள்.

'வேறு எது தான் மனிதப் பிறவி எடுத்ததற்குப் பலன்?' என்றால், 'மறுபிறவி இல்லாமல் இதைக் கடைசிப் பிறவியாக்குவதுதான் இந்தப் பிறவியின் பயனாகும். ஆதலால் பிறவி வேண்டேன்' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். ஆகையால், மறுபிறவியை ஒழிக்க இந்தப் பிறவி எடுத்திருக்கிறோம் என்று தீர்மானம் செய்ய வேண்டும். பகவானும் இவ்விதம் நினைத்துத்தான் இந்த ஜீவாத்மாவுக்குப் புனிதமான மனித உடலைக் கொடுத்திருக்கிறான் என்று சாஸ்த்ரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தப் பிறவி எடுத்ததற்குப் பலன் மறுபிறவியை ஒழிப்பதுதான் என்று ஐந்து நிமிஷத்தில் யோசனை செய்து முடிவுக்கு வந்துவிடுங்கள். அதன்பிறகு, 'மறுபிறவி இல்லாமல் எப்படித் தடுக்க முடியும்?' என்ற கவலை உண்டாகலாம். கவிதார்க்கிக ஸிம்ஹமான நம் தூப்புல் வேதாந்தகுரு ஸமஸ்த வேதாந்த ஸாரமான பரமபத ஸோபாநம் என்ற சாஸ்த்ரமான ஒரு கைவிளக்கைக் கொடுத்திருக்கும் போது நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? மறுபிறவி இல்லாமலிருப்பதற்கு அதில் சொல்லியிருக்கும் விஷயங்களை உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதை நன்றாகப் படித்துத் தெரிந்துகொண்டு அவ்விதமே செய்தீர்களேயானால் இப்பிறவி முடிந்ததும் மறுபிறவி இல்லை. இப்பிறவியோடு நம்முடைய கஷ்டங்கள் ஒழிந்துவிடுகின்றன; பரமாநந்தத்தை அடையலாம். ஸ்ரீவைகுண்டத்தில் பசுவானோடு சேர்ந்தும் அங்குள்ளவர்களோடு கலந்தும் அநுபவிக்கிற ஆநந்தத்துக்கு அளவே கிடையாது. நமக்குச் சொந்த இடம் பரம பதமேயாகும். ப்ரஹ்ம லோகம்



வரையில் நாம் குடியிருக்கும் இடமாகும். குடியிருக்கும் இடத்திலுள்ள கஷ்டமும், சொந்த இடத்திலுள்ள ஸௌகர்யமும் (ஆநந்தமும்) யாவரும் அறிந்தவை யாகும். பரமபதம் என்பது ஸ்ரீவைகுண்டம். அது ப்ரஹ்மாண்டத்துக்கு வெளியில் உள்ளது. அவ்வளவு உயரத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்துக்கு ஸுலபமாக ஏறிச் செல்ல ஒன்பது படிகள் கட்டியிருக்கிறார் ஸ்வாமி தேசிகன். படிகளும் அதிகமில்லை.

அந்தப் படிகளில் முதற்படிக்கு விவேகம் என்றும், இரண்டாவது படிக்கு நிர்வேதம் என்றும், மூன்றாவது படிக்கு விரக்தி என்றும், நான்காவது படிக்கு பீதி என்றும், ஐந்தாவது படிக்கு ப்ரஸாதஹேது என்றும், ஆறாவது படிக்கு உத்க்ரமணம் என்றும், ஏழாவது படிக்கு அர்ச்சிராதி என்றும், எட்டாவது படிக்கு ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டுவது (சுத்தஸத்வ தேச ப்ராப்தி) என்றும், ஒன்பதாவது படிக்குப் பராப்தி (பகவானை அடைவது) என்றும் அழகாகப் பெயர்களை வைத்திருக்கிறார். இந்த ஒன்பது படிகளிலும் ஒவ்வொன்றாக நாம் ஏறி, ஸ்ரீவைகுண்டம் அடைந்தால் மறுபிறவி இல்லை. ஒன்பது படிகளின் பெயர்களைத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது; அந்தப் படிகள் எப்படிப்பட்டவை என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இவைபற்றி நன்றாகச் சொல்லுகிறேன்; கவனித்துப் படியுங்கள்.

### 1. விவேகம்

ஒருவன் முக்தி அடைய வேண்டுமானால், அதற்கு முதலில் பகுத்தறிவு வேண்டும். 'நான்' என்கிறது எதை என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். நான் என்கிறது நம்முடைய உடலுக்குள்ளே இருக்கிற ஜீவாத்மா தான். அதற்கு அழிவு கிடையாது. அதைக் காட்டிலும் சிறிய வஸ்து கிடையாது. அறிவுள்ளது அது; ஜ்ஞாந மயமானது. அது பகவானுடைய சொத்து. இதுவரை அநேக விதமான பாபங்களைப் பண்ணி, அநேக விதமான பிறவிகளை அடைந்து, கடைசியில் இப்பொழுது மனித ஜன்மத்தை அடைந்திருக்கிறோம். இது ஒரு விவேகம். இரண்டாவதாக, 'பகவான் எங்கும் நிறைந்த பரம்பொருள், நமக்குத் தாய், தந்தையாக இருக்கிறவன், தயா மூர்த்தி, ஸர்வேச்வரன், லக்ஷ்மீ ஸமேதன், நாம் பண்ணுகிற புண்ய, பாபங்களுக்கு அநுகுணமாக நமக்கு ஸுக, துக்கங்களைக் கொடுக்கிறவன், ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ பூமி நீளா ஸமேதனாக அங்குள்ளவர்களுக்கு ஆநந்தத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறவன்' என்று தெரிந்து கொள்ள வேண்டும். கர்ம வசத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அடைந்து, மனிதர்களாகப் பிறந்திருக்கிறோம். இந்த மானிடப் பிறவி இருக்கும்போதே முக்தி அடைய, முன்னோர்கள் போல் ஆசார்யர்களைத் தேடி, அவர்கள் காட்டுகிற வழியினால் ஆநந்தமடையக் கூடியவர்கள் நாம் என்று நன்றாகத் தெரிந்துகொள்வது மூன்றாவது விவேகம். சுருக்கமாக இவ்வளவு தெரிந்து கொண்டால் முக்தியை அடைய விவேகம் என்ற முதற்படியை ஏறினவனாக ஆகிறான்.

### 2. நிர்வேதம்

நிர்வேதம் என்றால் என்ன தெரியுமா? வருத்தம் என்று சொல்லுவார்கள். 'எதைப்பற்றி வருத்தம்?' என்றால், 'நமக்குத் தாய், தந்தை ஸ்ரீமந்நாராயணன். நாமோ அவனுக்குப் பிள்ளைகள். அவன் நமக்கு மோக்ஷத்தைக் கொடுத்துத் தன்னோடு ஸமமாக ஆனந்தத்தைக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். இப்படி இருக்க, இது வரையில் எத்தனையோ கோடிக் கணக்கான ஜன்மங்களை எடுத்து வீணாக ஆக்கி விட்டேனே. பகவானை அடைந்து பரமானந்தத்தை அடைவதற்கு ஒரு நல்ல காரியத்தையும் செய்யாமல் மூடனாசுப் போய்விட்டேன். பெரியோர்களான வேதாந்திகளுடைய ஸம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் போய்விட்டேன். கணக்கில்லாத பாபங்களைச் செய்து மோசம் போனேன். நல்ல அநுஷ்டானங்களைச் செய்யாமல் விட்டொழித்தேன். எவ்வளவோ பாபங்களுக்குப் பலனாக எத்தனையோ நரகங்களை அநுபவித்தேன். எத்தனையோ சூது, களவுகள் செய்து எத்தனையோ ஜன்மங்களை வீணாக்கி விட்டேன். எத்தனையோ நாஸ்திக வாதங்கள் செய்து மஹா பாபியானேன். சாஸ்த்ரங்களை மதிக்காமல் என் இஷ்டப்படியெல்லாம் நடந்துகொண்டிருந்தேன், வெகு காலத்துக்கு முன்பே இந்தப் பகவானை ஆராதித்திருந்தால், அப்பொழுதே முக்தியடைந்து இருக்கலாமே. பல பல ஜன்மங்கள் பாழாகப் போய்விட்டனவே. என்ன செய்வேன்? இந்த ஜன்மத்திலாவது பகவானை அடைவேனா? ஐயோ! நான் என்ன செய்வேன்? யார் காலில் விழுவேன்? எந்த மஹான்கள் என்னைக் கரையேற்றுவார்கள்?' என்று நெஞ்சுருகி வருந்தினானேயானால், நிர்வேதம் என்ற இரண்டாவது முக்திப் படியில் ஏறினவனா கிறான்.

### 3. விரக்தி

விரக்தி என்றால் வைராக்யம். வைகுந்தமடைந்து பகவானோடு ஆனந்தம் அடைவது தவிர, இவ்விடங்களில் உள்ள சிற்றின்பங்களில் கொஞ்சங் கொஞ்சமாக ஆசையை விட்டொழித்தல். சிற்றின்பங்களில் ஆசையை ஒழிப்பதற்கு வழி ப்ரஹ்மதேவன் முதல் ஸகல தேவதைகளும் பட்ட கஷ்டங்களையும் கேட்டும், மனிதர்களில் கிருதயுகம் முதல் பூமண்டலத்தை ஆண்ட ராஜாதி ராஜர்களுடைய ஆனந்தத்தையும் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், இப்பொழுது நமக்குத்

தெரிந்த வரையிலும் அநேக தேசங்களிலும் பெரிய பெரிய பதவிகளை அடைந்து அதனால் ஏற்பட்ட மரணபர்யந்த மான கஷ்டங்களை அடைந்ததையும், கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமற்போன பல பதவிகளால் பல துன்பங்களை அடைந்து மனம் குமுறி வருந்துகிறவர்களையும், பெரிய பெரிய தனிகர் களும் தங்களுக்குச் சொந்தமான தனங்களைத் தாங்கள் அநுபவிக்க முடியாமல் திண்டாடுவதையும், சரியாக நடந்து கொண்டிருக்கும் போதே வீட்டில் ஏற்படக்கூடிய கலஹங்களால் ஏற்படும் கஷ்டங்களையும், திடீரென்று வியாதிகள் வந்து உபத்ரவப்படுத்துவது முதலியவற்றையும் நன்றாக ஒருவன் ஆலோசித்தால், இவ்வுலகிலுள்ள அநுபவங்களிலும் ஸ்வர்காதி லோகங்களிலுள்ள போகங்களிலும் ஒருவன் ஆசை வைப்பானா? ‘இவை அல்பம், துச்சம்’ என்றுதானே நினைப்பான்? ஆகையால், இவற்றில் மோகத்தை ஒழிப்பதுதான் வைராக்யம். இந்த அல்பங்களில் ஆசை விட்டால் விரக்தி என்ற மூன்றாவது படியை ஏறினவனாக ஆகிறான்.

**4. பீதி**

பீதி என்றால் பயம். பயம் என்ற இந்த நாலாவது படி ஏறிவிட்டால், பிறகு அதிகக் கஷ்டம் இல்லை. எந்த விஷயத்தில் பயம் வேண்டுமென்றால், கேளுங்கள், புத்தியைச் செலுத்துங்கள். இப் பொழுது நாம் மனிதராகப் பிறந்திருக்கிறோம். எறும்பு, புழு, பூச்சி, பாம்பு, கழுதை, கரடி, நாய், மாடு, யானை, நரி, சிங்கம் முதலிய அநேக ஜன்மங்களை எடுத்து, ஹிம்ஸைப் பட்டுத் திண்டாடி ஏதோ ஒரு புண்யத்தின் பலனாக வரக்கூடிய மனுஷ்ய ஜந்மங்களிலும் உயர்ந்த்தான நல்ல புத்தியுள்ள பிறவி இது. பிறவிகளுக்குள்ளே தொண்ணூற்றொன்பதாவது படி என்று வைத்துக் கொள்வோம்.

இப்படி உள்ள நாம் இறந்தால், நமக்கு மேல் என்ன பிறவி வரும் என்று ஆலோசித்தால், வரப்போகிற ஜன்மாக்களை நினைத்தால், என்ன உண்டாகும் தெரியுமா? பயம்தான் உண்டாகும். ஏனென்றால், பாபங்களுக்கு அநுகுணமாகத் தான் பிறவி. நாம் தான் புண்யம் என்ற கலத்தில் பூஜ்யம் போட்டிருக்கிறோமே. நமக்கு எப்படி அடுத்த பிறவி நல்லதாக வரும்? பாபங்களுக்கு அநுகுணமாகக் கழுதையோ குதிரையோ, புழுவோ பூச்சியோ எந்தப் பிறப்பு வருமோ, தெரியாது. நாம் பண்ணியிருக்கும் பாபங்களாகிற நெருப்புக்கு விறகுக் கட்டைபோல் நாம் எரிய வேண்டியதாகத்தான் இருக்கும்; அல்லது, மனிதப் பிறவியே வந்தாலும், எத்தனையோ நஷ்டங்கள், எத்தனையோ கஷ்டங்கள், வாயால் சொல்ல முடியாத அளவு பிணி, பசி, மூப்பு, துன்பங்கள்



முதலியவை நம்மை விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவிடுமே என்று ஒரு விவேகி நினைத்தானேயானால், வரப்போகிற பிறப்புக்களில் அவனுக்குப் பயம் உண்டாகாமல் இருக்குமா? இப்படி வரப்போகிற கோடிக்கணக்கான பிறப்புக்களை நினைத்து எப்படி எப்படிக் கஷ்டங்களை அடைய வேண்டியிருக்குமோ என்று பயந்தானேயானால், முக்தி அடைய ஸ்ரீதேசிகன் காட்டின ஒன்பது படிகளில் பீதி என்ற நான்காவது படியை ஏறினவனாக ஆகிறான்.

**5. ப்ரஸாதஹேது**

பிறகு ஐந்தாவது படி ப்ரஸாதஹேது. எத்தனையோ கோடி கோடி ஜன்மாக் களில் எத்தனையோ விதமான அக்ரமங்களைச் செய்த நாம், தாய்-தந்தையான பகவானுக்கு நம்மிடத்தில் கோபம் வரும்படி செய்திருக்கிறோம் அல்லவா? அந்தக் கோபத்தை விட்டு அவனுக்கு நம்மிடத்தில் அநுக்ரஹம் வருவதற்காக நாம் செய்ய வேண்டியது சரணாகதி தான். இந்த ஐந்தாவது படியை ஏறவில்லை என்றால், வைகுந்தம் ஏற முடியாது. இந்த ஐந்தாம் படியான சரணாகதியை ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மிகவும் விஸ்தாரமாக ஸர்வ ப்ரமாணங்களோடு நன்றாக, மனத்தில் பதியும்படி ஸாதித்திருக்கிறார். ஆனாலும் சுருக்கமாக இவ்விடத்தில் சொல்லுகிறோம்.

மஹர்ஷிகள் போல் பக்தி யோகம் பண்ணி மோக்ஷமடையச் சக்தியற்ற நம்மைப் போல்

உள்ளவர்கள், கீதையில் **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ । அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥** என்கிறபடி, ‘ஸகல கல்யாண குணங்களோடு கூடிய ஸ்ரீமந்நாராயணா! இன்றுமுதல் உன்இஷ்டப்படி அநுகூலனாக இருக்கிறேன். இதுமுதல் எவ்விதமான பாபங்களையும் செய்கிறதில்லை. நான் எவ்வளவு பாபியாக இருந்தாலும் சரணமடைந்தால் மன்னித்துக் கோபத்தை விட்டுக் கட்டாயம் முக்தி தருவாய் என்று நம்பி வந்தேன். இந்தச் சரீரம் போனவுடன் மறுபிறவி தராமல் மோக்ஷம் தர வேண்டும். நானும் அசக்தன், வேறு கதியும் இல்லை என்று நினைத்து, உன் சொத்தான இந்த ஆத்மாவை உன்னிடத்தில் ஸமர்ப்பிக்கிறேன்,’ என்று ஸமர்ப்பித்து, ‘நான் வைகுந்தமடைந்து உன் திருவடிகளில் கைங்கர்யம் பண்ணி ஆனந்திக்க ஆவல் உடையவனாக இருக்கிறேன். நான் அநேக கல்பகோடி காலமாகச் செய்த புண்யாபுண்ய ரூப மோக்ஷ விரோதி பாபநிவ்ருத்தி உபாய பரமும் உன்னுடையதே’ என்று ஸமர்ப்பித்து, ‘அதனால் வரும் பலன் உன்னுடையதே’ என்று ஸமர்ப்பித்து, த்வயத்தைச் சொல்லி முடித்து, ஸாத்விக த்யாகமும் செய்தானேயானால், ஐந்தாவது படி ஏறினவனாக ஆவான். ஆசார்யர்களும் இந்த ஐந்தாவது படியில் அவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி ஏற்றிவைக்கலாம்.

**6. உத்க்ரமணம்**

ஆறாவது படிக்கு உத்க்ரமணம் என்று பெயர். ஐந்தாவது படியாக ஆகிற சரணாகதியைப் பெருமாளிடத்தில் செய்த ஜீவாத்மா, இந்த உடலை விட்டுக் கிளம்புவதற்கு, ‘உத்க்ரமணம்’ என்று பெயர். ‘இது எல்லாருக்கும் உள்ளதுதானே? இதையும் ஒரு படியாகச் சொல்ல வேண்டுமா?’ என்றால், மோக்ஷத்துக்குப் போகிறவனுக்குக் கடைசியில் ஒரு வித்யாஸம் இருக்கிறது. அதாவது, எல்லாருக்கும் செத்துப் போகிற ஸமயத்தில் மனஸ்ஸில் எல்லா இந்த்ரியங்களையும் (கண், காது, மூக்கு முதலியவை) சேர்த்து, அந்த மனஸ்ஸை ப்ராணவாயுவோடு சேர்த்து, அந்த ப்ராணவாயுவை ஜீவாத்மாவோடு சேர்த்து, அந்த ஜீவாத்மாவை இந்தப் பெரிய உடலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட ஸூக்ஷ்மமான ஐந்து பூதங்களோடு சேர்த்து (இதற்குத் தான் ஸூக்ஷ்ம சரீரம் என்று பெயர்), இம்மாதிரியான ஸுக்ஷ்ம சரீரத்தோடு கூடின ஜீவாத்மாவை ஹ்ருதயத்தில் இருக்கிற பரமாத்மாவான தன்னோடே சேர்த்து வைக்கிறான் பரமாத்மா. இதுவரையில், மோக்ஷத் துக்குப் போகிறவன், போகாதவன் எல்லாருக்கும் ஸமமாகச் செய்கிறான் பரமாத்மா. பிறகு மோக்ஷத்துக்குப் போகாதவர்களை – சரணாகதி செய்துகொள்ளாத வர்களை – அவரவர் புண்ய பாபங்களுக்குத் தக்கபடி ஹ்ருதயத்திலுள்ள மறு பிறவிக்கு உரிய நாடிகள் வழியாகத் தள்ளிவிடுகிறான். மோக்ஷத்துக்குப் போகக்கூடிய ஜீவாத்மாவை அந்த ஹ்ருதயத்திலுள்ள நூற்றோராவது நாடியால், தன்னுடைய அநுக்ரஹத்தினால் ஸுசுமாக வெளியில் கிளப்புகிறான் பரமாத்மா. அப்பொழுதே இந்த ஜீவாத்மாவுக்கு ஆனந்தமாக இருக்கிறது. இவற்றைத் தெரிந்துகொண்டால் ஆறாவது படி ஏறினவனாக ஆகிறான்.

**7. அர்ச்சிராதி**

ஏழாவது படி அர்ச்சிராதி என்று பெயர் பெற்றது. இந்த ப்ரபந்நனான ஜீவாத்மாவைப் பகவான் தன்



கைங்கர்யரர்களான அக்னி தேவதை, பகலுக்கு அபிமானி தேவதை. சுக்லபக்ஷ அபிமானி தேவதை, உத்தராயணத்துக்கு அபிமானி தேவதை, ஸம்வத்ஸரத்துக்கு அபிமானி தேவதை, வாயு தேவதை, ஸூர்யன், சந்த்ரன், அமானவன் (வித்யுத் புருஷன்). வருணன், இந்த்ரன், ப்ரஹ்மா முதலான தேவதைகள் அவரவர் எல்லைபர்யந்தம் ஸகலவித உபசாரங்களோடு இவனை அழைத்துக்கொண்டு போகிறார்கள். இதில் அமானவன் என்று சொல்லப்பட்ட வித்யுத் புருஷன், இந்த ஜீவாத்மாவை ப்ரஹ்மாண்டத்திலுள்ள வைகுந்தம் போகிற சந்து வழியாக அழைத்துக் கொண்டு போய், பகவானிடத்தில் ஒப்படைக்கிறான். இவர்களுக்கு ஆதிவாஹிகர்கள் என்று பெயர். இதுவரையில் ஒருவன் தெரிந்துகொண்டுவிட்டால் ஸ்ரீதேசிகன் ஸாதித்த ஒன்பது படிகளில் ஏழாவது படி ஏறினவனாக ஆகிறான்.

**8. சுத்தஸத்வ தேச ப்ராப்தி**

இது ப்ரக்ருதி மண்டலத்துக்கு மேல் உள்ள விரஜா என்ற அம்ருதமயமான வைகுண்டத்தைச் சேர்ந்தது. நதியைத் தாண்டி, வைகுந்தத்திலுள்ள ஸ்ரீமந்நாராயணனுடைய ஸமீபம் போகிற பர்யந்தம், ‘பதாதிரோஹணம்’ என்று பெயர். அதாவது, மின்னல் புருஷன் என்கிறவன் இந்த ப்ரஹ்மாண்டத்தைத் தாண்டி, வெளியிலுள்ள ஆவரணங்களையும் தாண்டி, அதற்கு அப்பாலுள்ள விரஜா நதிக்கும் இந்த ஜீவாத்மாவை அழைத்துக்கொண்டு போகிறான். பிறகு ஜீவாத்மா தன்னுடைய ஸூக்ஷ்ம சரீரத்தை விரஜா நதியில் விட்டுவிடுகிறான். பிறகு விரஜா நதிக்கு அக்கரைக்கு நினைத்தவுடன் போகிறான். பிறகு, திவ்ய சரீரம் வருகிறது. ஒரு புஷ்கரிணிக் கரையில், ஒரு மரத்தடியில், வைகுண்ட வாஸிகளான அநேக அப்ஸரஸ்ஸுக்கள் இவனுக்கு ராஜாலங்காரம் பண்ணுகிறார்கள். அஷ்டாதச வாத்யங்களோடு வைகுந்தம் என்ற ஊருக்குள்ளே அழைத்துச் செல்லுகிறார்கள். ஆயிரக்கணக்கான மதிள்களையும் கோபுரங்களையும் எல்லாவற்றையும் கடந்து செல்லுகிறான். வைகுந்த வீதிகளில் உபசாரம் செய்கிறார்கள். ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபத்துக்குள்ளே போகிறான். ஆனந்த ஆரவாரமும் வாத்ய கோஷங்களும் அளவிட முடியாமல் இருக்கின்றன. இது வரையில் தெரிந்துகொண்டானேயானால், எட்டாவது படி ஏறினவனாக ஆகிறான்.

**9. பராப்தி**

ஒன்பதாவது படி பராப்தி என்று பெயர் பெற்றிருக்கிறது. அதாவது பரமபுருஷனான பரமாத்மாவை இந்த ஜீவாத்மா அடைவது எப்படி என்றால், அமானவன் என்ற ஆதிவாஹிகன் இந்த ஜீவாத்மாவை ஒப்படைத்தவுடன், ஜீவாத்மா, ஆதி சேஷதல்பத்தில் ஸ்ரீ, பூமி, நீளா ஸமேதனான ஸ்ரீமந்நாராயணனையே ஸேவித்துப் புளகாங்கிதகாத்ரனாக நின்றவாறே, பகவான் இவனைக் கட்டி அணைத்து விசாரித்து ஆனந்தப்பட்டு, நித்ய ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் உள்ள ஆனந்தம்போல் இவனுக்கும் தன்னையும் தன்னோடு ஸமமான ஆனந்தத்தையும் அநுக்ரஹம் செய்தவுடனே, ‘ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே’ என்கிறபடி, எல்லாவற்றையும் பகவானைப்போல் பார்க்கக்கூடிய ஜ்ஞாநவிகாஸத்தை உடையவனாக ஆகி, ஸோச்நுதே’ என்கிற படி அங்கும் இங்கும் உள்ள ஸகலவித போக போக்யங்களையும் அநுபவித்துக்கொண்டு, அந்த ப்ரீதியின் வெள்ளமாக ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் அங்குள்ளாரைப் போல் ஸர்வ தேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும் பரமன் திருவுள்ளப்படி ஸகல கைங்கர்யங்களைப் பண்ணிக்கொண்டு, பரமானந்த அநு பவம் செய்கிறான் என்று ஒன்பதாவது படியின் சுருக்கம். இதையும் ஒருவன் தெரிந்துகொண்டு விட்டானேயானால் அவன் எடுத்த மனிதப் பிறவியை வீணாக்கிக்கொள்ள மாட்டான். வைகுந்தமடைய வெகு சீக்ரத்தில் யத்னம் செய்வான்.

இப்படித் திருவுள்ளம் பற்றி, நம் கருணா ஸாகரமான நிகமாந்த தேசிகன் ‘பரமபத ஸோபானம்’ என்று பெயர்வைத்து ஆச்சர்யமான ஒன்பது படிகள் கட்டியிருக்கிறார். இந்தப் படிகளிலுள்ள இன்னும் அநேக விஷயங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டு மோக்ஷமடைந்தவர்கள் எத்தனை மஹான்கள்! இவ்வளவையும் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள் ஐந்தாவது படி சரணாகதி என்ற படியை ஆசார்யர்களின் மூலமாகத் தெரிந்துகொண்டு, மஹாவிச்வாஸத்தோடு ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்து அதற்கு மேல் உள்ள படிகளால் பகவானை அடைந்த மஹான்கள் எவ்வளவோ பேர்கள் வைகுந்த வரவுக்கணக்கில் ஏறியிருக்கிறார்கள். ‘அந்தணர் அந்தியர்’ என்ற பாசுரத்தின்படி, எல்லா ஜாதியரும் பகவானைச் சரணமடைந்து மோக்ஷமடைய உரிமை உள்ளவர்கள். ஸ்திரீகளோ புருஷர்களோ ஏமாந்துவிடாதீர்கள். இதை நன்றாகப் படித்துப் பார்த்து, புரியாத விஷயத்தைப் பெரியோர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இந்த ஒன்பது படியும் ஏறுங்கள். அளவில்லாத ஆனந்தத்தை அநுபவியுங்கள். உங்கள் இஷ்ட மித்ரர்களுக்கும் படித்துக் காட்டிச் சீர்திருத்துங்கள். அந்தப் பலனும் உங்களுக்கு உண்டாகும். ஸ்ரீநிகமாந்ததேசிகன் உங்களுக்குப் பரிபூர்ண அநுக்ரஹம் செய்வார் என்பது நிச்சயம்.

ஸ்ரீ:

# ஆண்டாளின் 'ஏறாளும் இறையோன்'

ஸ்ரீ உ.வே. பழவேரி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

தலைப்பைக் கண்டு அடியார்கள் வியக்கவேண்டாம். தலைப்பில் 'நம்மாழ்வாரின்' என்று எழுதவேண்டியிருக்க 'ஆண்டாளின்' எனத் தவறாக தட்டச்சு செய்துள்ளதாக எண்ணவேண்டாம். திருப்பாவையை **வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதைதமிழ்** என்பர். இச்சொற்றொடரில் வேதம் என்ற சொல் வடமொழிவேதத்தை மட்டும் கூறவில்லை; தமிழ்வேதத்தையும் கூறுகின்றது. ஆகையால் திருவாய்மொழியில் கூறப்பட்டுள்ள முக்கியமான விஷயங்கள் வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாலோ கோதையால் அருளிச்செய்யப்பட்டுள்ள இரண்டு துய்யதமிழ்மாலைகளில் காணமுடிகின்றது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அடியேனால் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

ஸ்வாமி நம்மாழ்வாரின் நான்காம்பத்து எட்டாம் திருவாய்மொழி **ஏறாளும் இறையோன்** எனத் தொடங்குகின்றது. இப்பதிகத்தின் ஸாரத்தை திருவாறாயிரப்படி **அவனால் உபேக்ஷிதமான ஆத்மாத்மீயங்களால் ஒரு ப்ரயோஜநமில்லை; இவை முடிந்துபோகவமையும்** என்கிறது. இதன் விளக்கமாக **அவன் வேண்டாத நானும் என்னுடைமையும் வேண்டா எனக்கு என்று ஆத்மாத்மீயங்களில் நசையற்றபடியை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்** என்று ஈட்டின் பங்க்த்தி அமைந்துள்ளது.

இதைச் சற்று விளக்கமாகக் காண்போம். இப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் பகவானின் மேன்மை, நீர்மை முதலான கல்யாணகுணங்களைக் கூறி அவற்றுடன் கூடிய அவன் விரும்பாதவையாய் தன்னிடத்தில் இருக்கும் மணிமாமை (ஒளிமிக்க நிறம்) முதலியவற்றை வேண்டாம் என்கிறார் ஆழ்வார். ஒவ்வொரு பாசுரத்தின் இறுதி அடியில் தன்னால் வெறுக்கப்படுவது யாது? என்பதை மணிமாமை குறைவிலமே, மடநெஞ்சால் குறைவிலமே, நிறைவினால் குறைவிலமே, தளிர்நிறத்தால் குறைவிலமே, அறிவினால் குறைவிலமே, கிளரொளியால் குறைவிலமே, வரிவளையால் குறைவிலமே, மேகலையால் குறைவிலமே, உடம்பினால் குறைவிலமே, உயிரினால் குறைவிலமே என்று பட்டியல் இட்டுக் காட்டுகின்றார். இதை ஆழ்வார் தானான தன்மையில் அருளிச்செய்யாமல் நம்போலியர்க்குத் தாக்கத்தை ஏற்படுத்த ஒரு தலைவியின் நிலையில் (அந்யாபதேசத்தாலே) அருளிச்செய்கின்றார்.

ஒரு காதல் மையலேறிய தலைவி, தலைவன் குறித்துச்சென்ற காலம் நெருங்க, தன்னைத் தன் தலைவன் அனுபவிக்கத்தக்கபடி அலங்கரித்துக்கொண்டு தலைவனை எதிர்பார்த்திருக்கும் வேளையில், அவன் வரப்போவதில்லை என்ற செய்தியை அறிந்தால் துன்புற்று ஆடை அலங்காரங்களைத் துறந்து, சந்தனக் கிண்ணியை விட்டெறிந்து தன் உயிரையும் வேண்டாதாளாய்த் துன்புற்றுத் தேய்வாள். ஒரு பரமபாகவதனும் பகவத்கைங்கர்யத்துக்கு உதவும் எதையும் ஆசைப்படுவான்; உதவாத அனைத்தையும் உதறித் தள்ளுவான். பகவதனுபவத்துக்கு, கைங்கர்யத்துக்குப் பயன்படும் எல்லாம் தேவையானவையே; பகவதனுபவத்துக்குப் புறம்பான அனைத்தும் விடத்தக்கவையே என்ற நிலையை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் எட்டிட வேண்டும் என்பதை உபதேசிக்க எண்ணி ஆழ்வார் இத்தகைய அழகிய பதிகத்தைப் பாடினார். ஆகையால் இப்பதிகத்தை மிகவும் முக்கிய பதிகமாகத் திருவுள்ளம் பற்றிய ஸ்ரீஆளவந்தார் மேற்படி கருத்தைத் தன் ஸ்தோத்ரரத்னத்தில் அழகாகவும் சுருக்கமாகவும்,

*ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம் அசேஷாபிலஷிதம்*
*ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத் |*
*பஹிர்பூதம் நாத! க்ஷணமபி ஸஹே யாது சததா*
*விநாசம் தத்ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம் ||*



என்று அருளிச்செய்தார். இவ்விஷயம் மிகவும் முக்கியமானது என்பதை ஸ்ரீமத்ராமாயணமும் பல இடங்களில் காட்டுகின்றது. ஒன்றை மட்டும் இங்கு பார்ப்போம். இளையபெருமாள் காட்டிற்கு உடன் செல்ல அடைக்கலம் புகுந்தபோது,

*ந தேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ரணே|*
*ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா||*

என்றார். உன்னைப் பிரிந்து கிட்டும் உலகங்கள் அனைத்தையும் ஆளும் ஐச்வர்யத்தையோ, கைவல்யத்தையோ, வைகுண்டப்ராப்தியையோ விரும்பேன் என்றார். இந்த ச்லோகத்தை **இளையபெருமாளின் ஏறாளும் இறையோன்** என்றார் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை. இளையபெருமாளின் இவ்வாக்கியத்தை ஸ்வாமி நம்மாழ்வார் திருவாசிரியத்தில் **திருவொடு மருவிய இயற்கை மாயாப்பெருவிறல் உலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும் கொள்ளுவது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே** என மொழிபெயர்த்தருளினார்.

இத்தகைய முக்கியமான விஷயத்தை ஆண்டாள் பதிவிடாமல் விடுவாளா? அதிலும் ஜீவன் இயற்கையாய்ப் பெற்றிருக்கிற பாரார்த்யத்தைப் போதிக்கவே அருளிச்செய்த திருப்பாவையில் குறிப்பிடாமல் விடுவாளா? இக்கருத்தை அவள் குறிப்பால் அருளிச்செய்தபடியை இனிக் காண்போம். திருப்பாவையில் இரண்டாம் பாசுரத்தில் பாவை நோன்பு காலத்தில் கைக்கொள்ளவேண்டியவை யாவை? கைவிடவேண்டியவை யாவை? எனப் பட்டியலிடுகின்றாள் ஆண்டாள்.

*வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்*
*செய்யுங்கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்*
*பையத்துயின்ற பரமனடிபாடி*
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
*மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்*
*செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமாறெண்ணி உகந்தேலோரெம்பாவாய்.*

கண்ணனை பிரிந்திருக்கும் நிலையில், அவனைக் கிட்ட அனுஷ்டிக்கும் பாவைநோன்பில், விடத்தக்கவையாக **நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்** எனக் கூறியிருப்பினும் இது பகவானின் தாஸ்யத்தை நன்குணர்ந்தவர் பகவானுக்குப் பயன்படாத புலன்கள், தன்னுடல், வீடு, உயிர் முதலிய அனைத்தையும் எக்காலத்தும் வெறுத்திருப்பர் என்பதைக் குறிக்கின்றது. இப்பாடலில் மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம் என்பது ஆழ்வாரின் **வரிவளையால் குறைவிலமே, மேகலையால் குறைவிலமே** முதலியவற்றோடு ஒத்திருப்பதாகும். இப்போது



திருப்பாவையின் இருபத்தேழாம் பாசுரத்தைக் காண்போம்.

*கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா! உந்தன்னைப்*
*பாடிப்பறைகொண்டு யாம்பெறு சம்மானம்*
*நாடுபுகழும் பரிசினால் நன்றாக*
*சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
*பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்*
*ஆடையுடுப்போம் அதன்பின்னே பால்சோறு*
*மூடநெய்பெய்து முழங்கை வழிவாரக்*
*கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.*

கண்ணன் கிட்டியபின் அவன் அனுபவத்துக்குச்சேர சூடகம், தோள்வளை, பாடகம் முதலிய எல்லாம் விரும்பி அணிய ஆசைப்படுகின்றாள் ஆண்டாள். இது பராங்குசன் என்னும் தலைவி குறித்த காலத்தில் தலைவன் வரவை எதிர்பார்த்திருந்த நிலையில் தன் மணிமாமையில் வரிவளை, மேகலை முதலியவற்றை அணிந்திருந்ததை ஒக்கும்.

ஆகையால் திருப்பாவையின் இரண்டாம் பாசுரத்தை அனுபவிக்கும்போது **மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்** என்பதுடன் **சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே என்றனைய பல்கலனும் யாமணியோம் ஆடை உடுப்போமல்லோம்** என்று கூட்டி அனுஸந்தானம் பண்ணிக்கொள்ளவேண்டும். அவ்வாறே திருப்பாவையின் இருபத்தேழாம் பாசுரத்தை அனுபவிக்கும்போது, **சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம் ஆடையுடுப்போம்** என்பதுடன் **நெய்யுண்போம் பாலுண்போம் நாட்காலே நீராடி மையிட்டெழுதுவோம் மலரிட்டு நாம் முடிவோம்** என்பதையும் சேர்த்து அனுஸந்திக்கவேண்டும்.

இதனால் திருப்பாவையின் இரண்டாம் பாசுரத்தையும் இருபத்தேழாம் பாசுரத்தையும் சேர்ந்து ஆண்டாளின் ஏறாளும் இறையோன் எனத் தட்டில்லை என்பது தேறிற்று.

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## திருவாடிப்பூர உத்ஸவம்










திருவாடிப்பூர உத்ஸவம்





ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## திருவாடிப்பூர உத்ஸவம்







ஸ்ரீ:





## திருவாடிப்பூர உத்ஸவம்









ஸ்ரீ:

கண்ணுக்கினியன





திருவாடிப்பூர உத்ஸவம்



ஊர்கோல உத்ஸவம்









ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்









ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்





ஸ்ரீ:





ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம்





ஸ்ரீ:

# வெள்ளைப் பரிமுகரும் வேதாந்தவாரியனும்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

**யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயம் தோறும் தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான்** என்று ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் அருளிச்செய்தவாறு பகவத் ஸ்வரூபம் நம் இந்த்ரியங்களுக்கும் மனதிற்கும் எட்டாதது. ஆகையால் உபாஸனைக்கு ஏற்றவாறு அவதாரங்களில் எம்பெருமான் தரித்திருக்கும் ரூபங்களே நமக்கு உபாயமாகும். இவற்றுள் ஹயக்ரீவ மூர்த்தியின் சிறப்பு எண்ணிலடங்காததாகும். குதிரை முகத்தோடு பிராட்டி ஸமேதனாய் ஜ்ஞானமுத்ரை தரித்து கமலாஸனத்தில் வீற்றிருக்கும் ஓர் அபூர்வமான, அற்புதமான வடிவம்! ப்ரஹ்ம ஜ்ஞானத்தை அளிக்கக் கூடிய வேதங்களை மது கைடபர்கள் சதுர்முக ப்ரஹ்மனிடமிருந்து அபஹரித்துச் சென்றனர். அவ்வஸுரர்களை ஸம்ஹரித்து வேதங்களை மீட்டுக் கொடுத்து மீண்டும் அவை களை ப்ரஹ்மனுக்கு உபதேசம் செய்வதற்காக எம்பெருமான் எடுத்துக் கொண்ட அவதாரமே ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரம். வேதங்களையும், உபநிஷத்துக்களையும் வெளிப்படுத்தும் ஓர் ஆச்சர்யமான அவதாரம்! **பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம் பரிமுகமாய்** என்றும் **வசையில் நான்மறை கெடுத்த அம்மலரயற்கு அருளி, முன் பரிமுகமாய்** என்றும் கலியன் போற்றிப்பாடுகிறார்.

ஸ்வாமி தேசிகன் ஆசார்ய ஸார்வபௌமனாகவும் கவிதார்க்கிக ஸிம்ஹமாயும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராகவும் விளங்கியதற்கு ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனுடைய அனுக்ரஹம் அவருக்குப் பூர்ணமாகக் கிட்டியது தான் காரணம் என்பது யாவரும் அறிந்ததே. ஸ்வாமி தேசிகன் திருவஹீந்த்ரபுரத்தில் ஔஷதகிரியில் கருட மந்த்ரத்தை உபாஸித்தார். அதனால் ப்ரஸந்நனான வேதாத்மாவின் ப்ரஸாதமாக ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தைப் பெற்றார். அம்மந்திரத்தின் துணையுடன் ஹயக்ரீவனைக் குறித்துத் தவம் செய்தார். எம்பெருமானும் ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனாக அவருக்கு ப்ரத்யக்ஷமாகி தன்னுடைய லாலாம்ருதத்தை ப்ரஸாதமாக வழங்கினார். அவருடைய திவ்யானுக்ரஹத்திற்கு பாத்ரரான ஸ்வாமி தேசிகன் ஜ்ஞானமாகிய செல்வத்தைப் பெற்றார். அதன் பிறகு ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளம் அனவரதம் ஹயக்ரீவனின் சிந்தனையும் த்யானமுமாக நிறைந்திருந்தது.





ஆசார்ய வள்ளலான ஸ்வாமி அஜ்ஞானமாகிற அகவிருளில் மண்டிக் கிடக்கும் நம்மை உய்விப்பதற்குத் திருவுள்ளம் பற்றி ஹயக்ரீவ ஸ்தோத்ரம் அருளிச்செய்தார். இதன்றி இவ்ஹயக்ரீவ ஸ்தோத்ரம் ஸ்வாமியின் ஆழ்ந்த பக்திக்கும் மற்றும் பல அற்புதமான க்ரந்தங்கள் அருளிச்செய்வதற்கும் ஓர் அடிக்கல்லாக இருந்தது என்றே கூறலாம்.

இதில் முக்கியமாக **ஸ்வதஸ்ஸித்தம் சுத்தஸ்படிக** என்று தொடங்கும் சுலோகத்திலும், **ஸமாஹாரஸ் ஸாம்நாம்** என்று தொடங்கும் ச்லோகத்திலும் **ஹேஷா ஹலஹல** என்பதாக குதிரையின் கனைப்பொலியைக் கூறுகிறார். ஹேஷா என்பது குதிரையின் கனைப்பொலி. வேதங்களெல்லாம் ஹயக்ரீவனுடைய ஹேஷா சப்தத்தை அனுஸரிக்கின்றன என்பதை வலியுறுத்துவதற்காகவே ஸ்வாமி இரண்டு ச்லோகங்களில் இந்த பதத்தை ப்ரயோகம் செய்துள்ளார் என்பது பெரியோர்களின் அபிப்ராயம். மூன்று வேதங்களுடைய அர்த்தம் முழுவதும் இந்த ஹேஷா சப்தத்தில் அடங்கியுள்ளது என்று ஸ்வாமி அருளிச்செய்துள்ளார். இந்த ஹேஷா சப்தம் வைதிக மதத்தை ஆதரிப்பவர்களுக்கு அநுகூலமாகவும் விபரீதவாதிகளுக்கு பீதியை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

**அபௌருஷேயைரபிவாக் ப்ரபஞ்சை:** என்கிற ச்லோகத்தில் **யதோ வாசோ நிவர்தந்தே** என்பதாக வேதங்களாலும் அறியவியலாதிருக்கும் உன் பெருமையை ஸ்துதி செய்யப் புகும் நான் விவேகமற்றவன். ஆகையால் உன் கருணை நிறைந்த கடாக்ஷங்களை அருள வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார். இது ஸ்வாமி தேசிகன் க்ரந்தங்கள் இயற்றும் போது ஹயக்ரீவனை அடி பணிந்ததை வெளிப்படுத்துகின்றது.

ஸ்வாமி தேசிகன் ஹயக்ரீவனிடமிருந்து விசேஷமாகப் பெற்ற அருளையும் ஜ்ஞானத்தையும் பல க்ரந்தங்கள், பாசுரங்கள் மூலம் உணர்த்துகிறார். ஸ்வாமியின் திவ்ய சரித்ரத்தில் அயிந்தை நகரும் கச்சி நகரும் முக்கிய ஸ்தலங்கள். இவ்விரு திவ்ய தேசங்களின் எம்பெருமானுக்கு தேவநாயக பஞ்சாசத் மற்றும் வரதராஜ பஞ்சாசத் ஸ்வாமி அருளிச்செய்துள்ளார். **முத்திதரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சி தன்னில் அத்திகிரி அருளாளர்** இணையடிகளில் சரண் புகுந்து ஸ்வாமி, க்ரந்தங்கள் அருளிச்செய்ததன் மூலமும் மற்றும் தர்க்க சாஸ்த்ர ஜ்ஞானத்தின் மூலமும் பெரும் தொண்டினை ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு செய்து வந்தார். பகவதனுபவத்தின் பரீவாஹமாக பல ஸ்தோத்ரங்கள் / க்ரந்தங்கள் அருளிச் செய்து பேரருளாளனின் திருவடிகளில் ஸமர்ப்பித்தார். இவை நேரடியாக ஹயக்ரீவனை ஸ்துதி செய்யும் வகையாக இல்லையென்றாலும், எம்பெருமான் ஹயக்ரீவனிடமிருந்து பெற்ற ஜ்ஞானத்தையும் பக்தியையும் ப்ரதிபலிக்கும் வகையாக அமைந்துள்ளது என்று கூறினால் மறுக்கவியலுமோ? காஞ்சீபுரம் என்கிற புண்ய ஸ்தலம் ஹயக்ரீவனின் அருளால் ஜ்ஞானத்தின் ஊற்று என்கிற பெருமை பெற்றது என்பதனை உணர்த்தும் விதமாக அங்கும் ஸ்ரீ ஹயக்ரீவனின்

நம் திருக்கோயிலில் நடை பெறும் உத்ஸவங்களின் தொகுப்பினை நேரலையில் அல்லது பதிவு செய்து காண உருவாக்கப்பட்ட ப்ரத்யேக **YouTube சேனல்.**

**இன்றே SUBSCRIBE செய்யுங்கள்**



விசேஷ அனுக்ரஹம் பற்றிச் சொல்ல வேண்டும் என்று ஸ்வாமி திருவுள்ளம் பற்றினார். அதைப் பற்றி ஸ்வாமி எவ்விதம் எவ்விடத்தில் தெரிவித்தார் என்பது மிகவும் முக்கியமான ஸ்வாரஸ்யமான ஒன்றாகும்!

ஸ்வாமி தேசிகன் அருளிய ஹஸ்திகிரி மாஹாத்மியம் என்பது காஞ்சீபுரத்தின் ஸ்தல வரலாற்றையும் ஸ்ரீ பேரருளாளனின் திரு அவதாரத்தையும் வர்ணிக்கும் ஓர் அற்புதமான க்ரந்தமாகும்! ப்ரஹ்மா எம்பெருமானை நேரில் ஸேவிக்க விரும்பி கடும் தவம் புரிந்தான். அவ்வமயம் எழுந்த அசரீரி ஸத்யவ்ரதமென்னும் க்ஷேத்ரம் சென்று அத்திகிரியை யாகவேதியாகக் கொண்டு அச்வமேத யாகம் செய்யுமாறு ஆணையிட்டது. ப்ரஹ்மாவும் விச்வகர்மாவை புதிய இடத்தை நிர்மாணம் செய்து யாகசாலையை அமைக்குமாறு கட்டளையிட்டான். அவ்விடமே காஞ்சீ என வழங்கப் பெற்றது. ஸ்வாமி தேசிகன் அவ்விடத்தை வர்ணிக்கும் பொழுது ஒரு பாசுரத்தில் **ஒண்மையுடை வாசி விளியோசையாலும்** என்று அருளிச் செய்கிறார். வாசி என்பதற்கு குதிரை என்று பொருள். அழகு பொருந்திய உயர்தரக் குதிரைகளின் கனைப்பின் ஓசை அங்கு நிரம்பியிருந்தது என்று பிரமன் விச்வகர்மா நிர்மாணித்த காஞ்சியைக் கண்டு மகிழ்வதாக ஸ்வாமி வர்ணிக்கின்றார். இங்கு ஸ்வாமி தேசிகன் குதிரையின் கனைப்பொலி பற்றிச் சொல்வதன் காரணம் தான் என்ன?

ஒவ்வொரு இடத்திற்கும் ப்ரதானமாக சில ஒலிகளைச் சொல்வது தகும். ஒவ்வொரு திருத்தலமும் தனித்துவமான நாதத்துடன் இணைக்கப்படுகிறது. கோகுலத்தில் கண்ணனின் குழலோசை, திருமலையில் கோவிந்தா என்னும் பக்தர்களின் கோஷம். அது போல் **தொண்டை மண்டல வேதியர் வாழவே** என்று ஸ்வாமியே அருளிச் செய்தபடி காஞ்சிபுரத்தில் வேதம் ஓதும் பண்டிதர்களின் கோஷம் நிரந்தரமாக ஒலிக்கின்றது என்பதை உணர்த்துவதற்காகவே குதிரையின் சப்தத்தை கூறுகிறார்! அதுவே வேத ஒலி. வேதங்கள் பகவானின் மூச்சுக் காற்று என்பர். இந்த நாதம் வேத ஒலியாக இப்ரபஞ்சத்தில் ஒலிக்கின்றது. இந்த வேத ஒலியின் ஸ்வரூபமே ஸ்ரீஹயக்ரீவர். ஹயக்ரீவர் என்கிற திருநாமமே ஒலி, ஒளி, ஜ்ஞானம் என்பவற்றை தன் ஸ்வரூபமாகக் கொண்டவர் என்று பறை சாற்றுகிறது என்பர் ஆன்றோர். வேதங்களின் ஆதி மூர்த்தியாகவும், ஜ்ஞானத்தின் ஆதாரமாகவும் , வாக் சக்தியின் அதிபதியாகவும் போற்றப்படும் ஹயக்ரீவனை இவ்விதம் தம் வாழ்கையில் மிகவும் நெருங்கிய தொடர்புடைய காஞ்சீபுரத்துடன் மறைமுகமாக ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

இத்துணை பெருமையுடைய ஹயக்ரீவர், ஸ்வாமி தேசிகனின் வாக்குக்கும் அதன் உட்பொருளுக்கும் அடித்தளமாக இருந்தார் என்றும் தமிழ், ஸம்ஸ்க்ருதம், ப்ராக்ருதம் என மூவகை மொழிகளிலும் அவர் திருவாக்கினின்று வெளிப்படும் ஒவ்வொரு வார்த்தையும் ஸ்ரீஹயக்ரீவனின் அருளொடு இணைந்த வேத ஒலியின் ப்ரதிபலிப்பேயாகும் என்பது ஆன்றோர்களின் ஒருமித்த கருத்தாகும்!

## ஆவணியில் முக்கிய உத்ஸவங்கள்

**‘ராமாநுஜ தயாபாத்ரம்’**
**தனியன் திரு அவதார உத்ஸவம்**
ஆகஸ்ட் 26 (செவ்வாய்)

**ச்ரவணம் - ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி**
செப்டம்பர் 5 (வெள்ளி)

**ஸ்ரீஜயந்தி**
செப்டம்பர் 15 (திங்கள்)

**உறியடி உத்ஸவம்**
செப்டம்பர் 16 (புதன்)

ஸ்ரீ:

# நின் சாயைக்குக் குறைவு வரலாமோ?

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஜகத்ப்ரபுவும் தேவாதிதேவனுமான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆஸுரப்ரக்ருதிகள் தன் அடியார்களை ஹிம்ஸித்தபொழுதும், தர்மம் வீழும்போதும் மத்ஸ்ய-கூர்ம-வராஹாதிகளாய் முதலில் அவதரித்து, துஷ்ட நிக்ரஹம், ஸாதுரக்ஷணம் மற்றும் தர்மஸ்தாபனம் செய்தருளினான். பின் அவனே **மாறில் போர் அரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்** என்று கொண்டாடும்படியாக சக்ரவர்த்தித் திருமகனாய் ஒரு வானரக்கூட்டத்தின் துணையுடன் ஸர்வ வல்லமை படைத்த ராவணனையும் அவனைச் சார்ந்திருந்த அஸுரக் கூட்டத்தையும் கொன்று தீர்த்தான். **அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம** – 'ஒருவன் என்னிடத்தில் 'சரணம்' என்ற பொழுதே அவன் விபீஷணனாயினும் அல்லது விபீஷணவேடம் தரித்து வந்த ராவணனே ஆயினும் நான் அவனை ரக்ஷித்தே தீர்வேன். இது என்னுடைய வ்ரதமாகும்.' என்று சொல்லி தன் ஸர்வரக்ஷகத்வத்தை ஸ்தாபித்தான்.

கோவலர் குட்டனாய் பூதநா, சகடாஸுர, சிசுபால, கம்ஸாதிகளை ஒழித்து, **தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றி சோகம் தீர் –** என்று தானே உபதேசித்தருளி, கீதாசார்யன் தன் ஸர்வலோக சரண்யத்வத்தையும் நிர்தாரணம் பண்ணினான். மேலும் சாஸ்த்ரங்களைக் கைவிளக்காகக் கொடுத்தும் ஆங்காங்கே அர்ச்சாரூபமாய் எழுந்தருளியும் அவன் ஸம்பத்தான சேதன-அசேதனங்கள் அனைத்தையும் இன்றளவும் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான்.

ரக்ஷ்ய வஸ்துவை துஷ்டர்களிடமிருந்து ரக்ஷிப்பது ரக்ஷகனின் கர்த்தவ்யம்தான். இருப்பினும் நம்முடைய ஸ்திதி எப்படியிருக்கிறது? ஸ்வாமி தேசிகன் கூற்றுப்படி, **அஹமஸ்மி அபராத சக்கரவர்த்தி –** நாமோ அபராத சக்ரவர்த்திகள். **ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந் ந மயா வ்யதாயி** என்றபடி சாஸ்த்ரங்களாலும் சாஸ்த்ரம் அறிந்த சான்றோர்களாலும் இது தீவினை, இதனைச் செய்யக் கூடாது' என்று எவை எவை ஒதுக்கப்பட்டனவோ அத்தகைய தீவினைகள் அனைத்தையும் ஒன்றையும் விடாமல் பல்லாயிரம் முறை செய்பவர்கள் நாம். இப்படி ஆஜ்ஞாதிலங்கனங்களையே அநாதியாக செய்து பழக்கப்பட்ட நம்மீது தண்டதரனுக்கு நிக்ரஹம் உண்டாகி அதன் காரணமாக நம்மை சிக்ஷிக்க ஸங்கல்பம் கொள்வானேயன்றி அங்கே ரக்ஷணம் இல்லாமல் போகுமே. இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் நாம் என்ன செய்வது?

பட்டர்பிரானும், ஸ்வாமி ஆளவந்தாரும் ஸ்வாமி தேசிகனும் சேதனர்களின் இந்த நிலையை தங்கள்



நிலையாக ஏறிட்டுக்கொண்டு எம்பெருமானிடம் செய்யும் விண்ணப்பத்தை சற்று அநுபவிப்போம்.

விஷ்ணுவையே ஸதா தன் சித்தத்தில் கொண்டு, ஸ்ரீ விஷ்ணுசித்தர் என்ற திருநாமத்தை உடைய தன்னை ஸர்வரக்ஷகன் ரக்ஷிக்காமல் போகும் பொருட்டு தான் தேவதாந்தரங்களிடம் கை ஏந்தி நிற்பது என்பது அவனுடைய பெருமைக்குதான் இழுக்கு என்று கதறுகிறார் ஸ்வாமி பெரியாழ்வார்:

*உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடையேன்*
*இனிப் போய் ஒருவன்*
*தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயை*
*அழிவு கண்டாய்*
*புனத்தினை கிள்ளிப் புதுவவி காட்டி உன் பொன்னடி*
*வாழ்க என்று*
*இனக் குறவர் புதியதுண்ணும் எழில்*
*மாலிருஞ்சோலை எந்தாய்.*
(பெரியாழ்வார் திருமொழி 5-3-3)

'அழகு பொருந்திய திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானே! குறவ ஜாதியர் உனது அழகிய திருவடிகள் நீடூடி வாழ வேண்டும் எனப் பல்லாண்டு பாடி கொல்லைகளில் விளைந்த தினைக் கதிர்களைப் பறித்து அதில் செய்த புதிய ஹவிஸ்ஸை உனக்கு நைவேத்யமாக ஸமர்ப்பிக்கிறார்கள். இதை உண்ணுதற்குப் பாங்கான இடமாக நீ எழுந்தருளியிருக்கும் இம்மலை உள்ளது. ஸர்வ ஸ்வாமியான உனக்கு இடைவிடாமல் வழுவிலா கைங்கர்யங்கள் செய்வதை அளிக்கும் உபாயமான சரணாகதியை உன்னிடத்தில் அடியேன் செய்துள்ளேன். உன்னையே அனுபவித்து வரும் எனக்கு நீ உன் விஷயமாக அந்திம ப்ரத்யத்தை உண்டு பண்ண வேண்டும். அப்படி பண்ணாமற்போனால் அப்போது கடைத்தசையில் வரும் தோற்றமானது வேறு விஷயமாய் முடியுமே. பக்தி, ப்ரபத்தி என்கிற உபாயங்கள் எல்லாப் பலன்களையும் அளிக்கவல்லன அல்லவோ. ஆக அந்திம ப்ரத்யமானது அந்ய விஷயத்தில் உண்டானால் ப்ரஹ்ம, ருத்ர, இந்திராதி க்ஷுத்ர ஸ்தானங்களில் புகுந்து அங்கே கடைத்தலை நிற்க வேண்டிய நிலை அடியேனுக்கு வருமே! பிறர் வாசலில் நான் நிற்பது உனது கீர்த்தி, மேன்மை, காந்தி இவற்றின் அழிவுக்குக் காரணமாகுமே! இப்படி அநந்யகதியனை கைவிட்டானே என்று உன்னை உலகம் நிந்திக்குமே! உலகத்தாரின் இந்த பழிச்சொல் உனக்கு வருத்தத்தை உண்டாக்குமே!' என்று தன் விஷயத்தில் ரக்ஷணம் இல்லாமல் போவது அவனது சாயைக்குக் குறைவை ஏற்படுத்துமே என்று பாரிக்கிறார் ஆழ்வார்.



ஸ்வாமி ஆளவந்தாரோவென்னில் சேஷனை ரக்ஷிப்பது ஸர்வசேஷியின் லக்ஷணம் மற்றும் கர்த்தவ்யம் என்பதை நினைவூட்டி அது தம் விஷயத்திலும் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

*அபூதபூர்வம் மம பாவி கிம் வா*
*ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:கம் ।*
*கிம் து த்வதக்ரே சரணாகதாநாம்*
*பராபவோ நாத ந தேSநுரூப: ॥*

(ஸ்தோத்ர ரத்னம் - 35)

'போகின்ற காலங்கள், போய காலங்கள், போகு காலங்கள் என்றபடி எல்லாக் காலங்களிலும் எல்லாவிதமான துன்பங்களையும் அடியேன் பல பிறவிகளிலும் அநுபவித்திருப்பேன், அநுபவித்திருக்கிறேன். ஆகவே இனி புதியதாக, இதுவரை அநுபவிக்காத துன்பம் என்று ஒன்று என்ன நேரிடப் போகிறது? ஆனால் தேவரீர் ஸர்வசக்தர், ஸர்வஜ்ஞர், பரமகாருணிகர் என்றெல்லாம் பெயர் பெற்றவர். ஸ்ரீவராஹ - ஸ்ரீராம - ஸ்ரீகிருஷ்ணாவதாரங்களில் சரம ஸ்லோகங்களை அருளி ப்ரபத்தியே சிறந்த உபாயம் என்று நீரே ப்ரத்யக்ஷமாகவும், பின் ஆழ்வார், ஆசார்யர்கள் மூலமாகவும் நிலை நாட்டியவர். ப்ரமாணங்களும் இவற்றையே ஸ்தாபிக்கின்றன. அப்படியிருக்க சரணடைந்தவர்களின் துக்கங்களைப் போக்கி எம்பெருமான் அவர்களை ரக்ஷிக்கவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டு ஊரில் உள்ளவர்கள் தேவரீரை நிந்தித்தால் அது உம்முடைய பெருமைக்கும் ஸ்வரூபத்துக்கும் பாங்காகுமோ? ஆகவே உமது பெருமைகளைக் காத்துக்கொள்ளவாவது தேவரீர் கையை எதிர் நோக்கியிருக்கும் அடியோங்களை ரக்ஷிப்பது தேவரீரின் கடமையாகின்றது,' என்கிறார் யமுனைத்துறைவர்.



*ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।*
*பரிஹர மதுஸூதநபிரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥*
*[விஷ்ணு புராணம் 3-7-14]*

'யமதர்மன், பாசக்கயிற்றை கையில் வைத்துக் கொண்டிருக்கிற தன்னுடைய தூதனைப் பார்த்து அவனுடைய காதில் சொல்கிறான்: பகவானை ஆச்ரயித்தவர்களை விட்டுவிடு; நான் பகவானை ஆச்ரயிக்காதவர்களுக்கு மட்டுமே யஜமானன், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அல்ல' என்று.

*தேவம் சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம்।*
*ந தேஷாம் யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ: ॥*
(வாமந புராணம் 94-43)

'தேவாதி தேவனான, சார்ங்கத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற விஷ்ணுவை யார் சிறந்த உபாயமாகவும் ப்ராப்யமாகவும் அடைந்தார்களோ, அவர்கள் யமலோகத்தில் வஸிப்பதும் இல்லை; அவர்கள் நரகத்தை வாஸஸ்தானமாக உடையவர்களும் இல்லை.'

இவ்விஷயத்தில் ஸ்வாமி தேசிகனின் அநுபவம் மிகவும் ஸ்வாரஸ்யமானது:

*பூயோऽபி ஹந்த வஸதிர்யதி மே பவித்ரீ*
*யாம்யாஸு துர்விஷஹ வ்ருத்திஷு யாதநாஸு ।*
*ஸம்யக் பவிஷ்யதி தத: சரணாகதாநாம்*
*ஸம்ரக்ஷிதேதி பிருதம் வரத த்வதீயம் ॥*
(ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் - 35)

'ஹே வரம் தரும் பேரருளாளனே! அடியேனோ உன்னைச் சரணடைந்து, தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை எதிர்பார்த்திருப்பவன் **(ஏதத் தேஹாவஸாநே மாம் த்வத் பாதம் ப்ராபயஸ்வயம்).** நீயோ உன்னைச் சரணடைந்தவர்களுக்கு **மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்.** (புராண ப்ரமாணங்களின் படி) உன்னையே ஆச்ரயித்து இருக்கும் எனக்கு நரகம் சென்று, அங்கே யமதர்மன் செய்யும் பொறுக்கவொண்ணாத வேதனைகளை அனுபவிக்கும் சூழ்நிலை வரவே வராது. அப்படி வருமானால் உன் நிலையை சற்று நினைத்துப் பார்த்தாயா? உன்னையே சரணம் என்று அடைந்தவனுக்கும் நரக வேதனை ஏற்படும் என்றால் 'ஆச்ரித ரக்ஷகன்', 'ப்ரணதார்த்தி ஹரன்', 'ஸர்வலோக சரண்யன்', 'சரணமடைந்தவர்களை சீரிய முறையில் காப்பவன்' என்ற உன் விருதுகள் அப்பொழுது உனக்கு மிக நன்றாகப் பொருந்துமன்றோ? ஆதலின், உனது விருதுகளைக் காத்துக்கொள்ள வேண்டுமாயின் எனக்கு நரகவேதனை வராமல் பார்த்துக்கொள்வது உனது கடமையாகும்' என்று மிகவும் ரஸமாக அருளிச்செய்கிறார் நம் கவிஸிம்ஹம்.

எல்லோருக்கும் நிருபாதிக நாதன் எம்பெருமான் ஒருவனே. அவனுக்கு தாஸர்களான நாம் அவனிடத்தில் நம் ரக்ஷ்யபரத்தை ஸமர்ப்பித்த பிறகு ரக்ஷண விஷயமாகச் செய்ய வேண்டியது வேறொன்றும் இல்லை. அவன் நம்மை ரக்ஷித்தே தீர்வான் என்ற மஹாவிவேகம் கொண்டும், **வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே** என்ற ஆழ்வார் வாக்கை ஸ்மரித்து, இமையவரோடு ஒன்றி நாம் பெறப்போகும் தடையில்லா கைங்கர்யத்தை எதிர்பார்த்திருப்போம்! ❋

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (29)

## Let Us Invoke The Grace Of The God Of Knowledge

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Knowledge is the fulcrum of all virtues, and it elevates the state of the human mind. It is such a unique element that if once possessed, no external force can do any damage to it. So, it is perceived as the foremost among all wealth, as the others are prone to possible destruction.

Legend has it that when there was a severe crisis to the survival of the Vedas, Lord Vishnu took the form of Hayagriva, and restored the treasure and gave them back to Brahma. With the face of a horse and human body, this incarnation possesses four hands, the right hands carrying the chakra and sign of wisdom (Jnana Mudhra) and the left ones holding the conch and book. He is seated on the white lotus with a crystal-like complexion, and is an embodiment of knowledge and Pranava (Onkara) and an abode of unbridled compassion for His devotees.

Swami Desika worshipped Lord Hayagriva in his Nithya Aradhana (daily worship). That is why, an idol of Lord Hayagriva is also installed wherever Desika's is. So, it is in the fitness of things that Swami Desika composed his first hymn on Lord Hayagriva. Hayagriva ('Haya' translates to horse and 'Griva' to neck, meaning the 'horse-necked' or 'horse-faced') is considered as the 'God of Knowledge'.

The day of Hayagriva's incarnation is given as Aavani Sravanam (Thiruvonam). Little wonder that Sri Desika, who shares the Star with his favourite deity, himself is an epitome of resplendent knowledge.

Sri Hayagriva Jayanthi falls on September 5 (Friday) this year. Though many know Sri Hayagriva Sthothram by heart, reciting it with the knowledge of the meaning would enhance the devotional fervour and enrich the experience. Hence, presenting here the meaning of the 33 effervescent Slokas of this hymn. As his wont, the Acharya has sprinkled a good measure of enjoyable similes and metaphors through the hymn.

1. We worship Lord Hayagriva who is the epitome of knowledge and bliss, whose form is like an unblemished crystal, and who is the source of all fields of learning.
2. Let us extol the radiant horse-faced Lord who is self-manifest; who is like a mountain made of pristine crystal; who, with His nectar-like luster, brightens the three worlds; whose neighs sounding like 'hala hala' represent the infinite Upanishads, and capable of removing the difficulties of all (His devotees)!



3. The 'hala hala' neighs of the horse-faced Lord are the essence of the Sama Veda, equivalent of the Rug Veda and a storehouse of the Yajur Veda; they are the annihilator of obstacles and rows of waves of ocean-like wisdom. May they dispel the ignorance created by the arguments of multitudes of arrogant debaters!
4. May I envision the horse-faced form of Lord Vasudeva that is the wonderful eastern dawn to the internal darkness and magical collyrium to the eye of wisdom! He is the tutor of the Vedas and the God of learning.
5. I surrender myself to Lord Hayagriva who is the embodiment of pure wisdom and who has taken a vow to bestow supreme wisdom (on His devotees). He is the repository of compassion and the refuge to all living beings.
6. O Lord! Till date the extent of Your glory could not be measured even by the ageless Vedas. I, attempting to praise You, deserve to be considered by You as 'ignorant' and bestowed with Your graceful side-glances.

7. Dakshinamurthy — the handsome, south-faced form of Siva, Goddess Saraswathi — the Consort of the lotus-seated Brahma and the highly-admirable Vyasa... all these and others have exalted status, courtesy the droplets of Your prowess.
8. O Storehouse of all knowledge! If You had not, out of mercy, taught the Vedas stolen away by demons, Brahma would have remained ignorant, bereft of his fortune.
9. O Lord! You removed doubts from the vacillating mind of Bruhaspathi and showed him the right way. That is why the polity of the Deva regime acquired solidity.
10. (O Hayagriva!) You assume the form of Manthras in the burning fire and give away the extremely tasty oblations (Havis) to the Celestials who are pleased with that.
11. People of pure serenity truly recognise You as the root-cause of the entire Universe, root of the large trees that the Vedas are and the inexhaustible Pranava — the foremost of alphabets.
12. O Lord of Speech! First You brought out names and forms from the primordial matter. Also, You are the final destination of all these, praise the Vedas which were revealed by You.



13. The wise men meditate upon Your form which is like the essence of the beautiful young moon, very much lovable, pours the nectar of bliss and a big splash of the Milky Ocean.
14. You are like a royal swan in the pond-like minds of the learned men. To whosoever envisions You in his mind, words vie with each other to serve him appropriately.
15. Those who contemplate You even for a fraction of a second as bright, inundating rays, will be capable of rendering even the Celestial Ganga slow by their strong flow of words.
16. O Lord! Those blessed people who bathe in the nectar of contemplation on You, derive delightful horripilation all over their body.
17. O Lord! The blessed ones who envision You like moon-rise in their mind, let out tears of unbridled joy that well up in their eyes.
18. O Master! The wise men of unimpeded glory, who subjugate their mind to You, acquire mental strength. With the help of Your grace, they are able to cross this material world which, for You, is like a playing instrument and a charming bunch of peacock feathers.
19. May my prostrations at Your lotus feet ever be increasing! They are really the desire-yielding Celestial Gem-stones (Chinthaamani)! They are the fruits of the good deeds done before and capable of securing for me the hitherto unrealisable treasure of salvation.
20. O Master! Your lotus feet are capable of wiping off even the writing of fate and adorned by the crowns of Brahma and others. May I receive the grace of their dust particles in abundance!
21. We contemplate on Your feet which by the sun-like radiance of the anklets dispel ignorance, and like the morning twilight sets in bloom the lotus of wisdom.
22. We believe that the sweet-sounding, gem-studded anklets of Yours are fit to be adorned by Your devotees and are the safe-chests of the Vedas which are protected by You for numerous Kalpas.
23. I contemplate on Your beautiful hand displaying the Vyakhyana Mudhra which kindles the lamps of philosophy in the wicks of wisdom, and resembling a sprout of the desire-yielding tree.
24. O Master! I cherish in my mind Your right

palm which holds a string of beads. For the enthusiastic devotees, it is like a sportive pulley to bring up the nectar of wisdom.

25. O Lord! I contemplate on Your left hand which holds a book and is capable of protecting the devotees. With its red hues, it appears to hold a clutch of corals from the ocean of knowledge.
26. I meditate upon Your divine figure which is akin to the moon in the autumnal cloud, seated in a fresh white lotus, removes the darkness of ignorance with bright rays and delights the Chakora birds (these birds feed on moonlight and hence they are used as a metaphor for scholars).
27. O Lord! May Your eye-glances, which follow waves of compassion, bestow on me power of speech which sprinkle nectar into the ears of people and stands like the celestial cow (Kamadhenu).
28. O Master! I wish to conquer the best of poets and logicians who are competent and have participated in debates in the assembly of learned men.
29. O Lord! I contemplate on You through the rays of Manthras, become like You and extol You. May I rise as a victor in the assemblies after arguing at will!
30. I do not possess great knowledge in various disciplines. Nor have I been blessed with sacred baths in the waters (contact of Acharyas). You are known for Your mercy in accepting destitute, and I have now become a subject of Your mercy. So, I am fit for Your ready acceptance.



31. May my mind be adorned with Your grace so that it shines resplendently with noble and unshakable truths devoid of murky doubts!
32. May the Lord of speech of flawless glory and undiminishing brightness, who, in His (four) lotus-like hands, holds the Vyakhya Mudhra, a book and the Discus and Conch and seated in a beautiful white lotus, immerse me in His white, nectar-like luster, and manifest in my mind!
33. Read with devotion this Hayagriva Sthothra composed by Sri Venkatanatha, who is a veritable lion among poets and logicians, to attain proficiency in speech and poesy!

Let us recite the hymn, contemplate the meaning and worship Lord Hayagriva to invoke His resplendent and bountiful grace!

*(to be continued…)*


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (29)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 28**

**Dvaya Adhikaram**

Swami Desikan explains in detail about the Dvaya mantra.

Dvayam expands upon the Thirumantram and elucidates the Upaayam and Praapyam shown in brief in the Nama: sabdam and Narayana sabdam in Ashtaksharam.

The Dvaya mantra is found in Katopanishad as two separate parts, and in Prasna Samhithai of Sri Pancharatram with explanation for each letter, serving as both Vaidika mantra and Tantrika mantra. Since it propagates the two concepts of Upaayam (means) and Upeyam (goal), it is called Dvayam. It should be obtained as Upadesa from a Sadacharyan. This mantra's greatness is unimaginable and chanting it once for Prapatthi would remove all sins as per Pramanas. Dvayam is the greatest of all Prapatthi mantras as it enunciates very clearly upon Upaayam and Praapyam. Saranagati Gadyam of Sri Bhashyakarar is but an expansion of Dvayam, avers Swami Desikan.

The first word 'Sriman Narayana' denotes Paratatvam (Isvara). He is Upeyam, (phalan) along with Lakshmi, as denoted by the 'Srimath' sabdam.

'Sri' sabdam has been explained in six different ways in Sri Pancharatram.

**'Sreeyathe' and 'Srayathe':** Her Aasrayam is Narayanan and our Aasrayam is She. She makes us surrender to Him. She is merciful towards offenders and relieves Bhagavan's anger towards them like a mother, and begets the desired benefit for them due to Her influence with Her consort. She is known to be / render "Purushakaram" since she recommends our redemption to Bhagavan.

**'Srunothi' and 'Shravayathi':** She listens to us and makes Bhagavan listen to Her. She hears our despairing cries and advocates our redemption to Her consort.

**'Srunaathi' and 'Sreenathi':** She mitigates all our sins and adverse effects of our misdeeds. She is ever compassionate and inculcates good qualities in Jeevas resulting in them seeking Moksham.

The 'Narayana' sabdam in the first part of Dvayam denotes twelve attributes:

1. **Vatsalyam:** Affection and sympathy for Chetanas causing forgiveness.
2. **Svamitvam:** Eternal connection with Chetanas as Master.
3. **Soushilyam:** Mingling with all without discrimination (Vanaras, Hunters, etc.).
4. **Soulabhyam:** Being accessible to all beings.
5. **Sarvajnatvam:** Omniscient.
6. **Sarva Sakthitvam:** Omnipotent. Ability to make the impossible possible.



7. **Sathyasankalpatvam:** No impediments to His Will including Himself.
8. **Parama kaarunikatvam:** Desire to mitigate the sorrows of others.
9. **Krutajnyatvam:** Gratified for a small deed as if a big favour was done.
10. **Sthiratvam:** Being steadfast in protection.
11. **Paripoornatvam:** Ability to attain all that is desired.
12. **Paramodharatvam:** Giving eternal benefit for a small deed and still feel dissatisfied about the granted favour not being enough.

The 'Charana' sabdam which denotes the divine feet of Bhagavan actually encapsulates His Divyamangala Vigraham. His Moorthi is Subhasrayam and hence fit to be meditated upon. But divine feet are specifically invoked here because, latching on to the feet and not letting go is common when we beg for something, it increases the compassion of Bhagavan, and it is cherishable.

Then, Swami clarifies that even though Bhagavan has Sarvasakthi, just as His attributes play a part in His being Upaayam, Piraatti is also Upaayam along with Him and there is no contradiction. They stand in place of Bhakti Yoga for Svatantra Prapatthi Nishtan in granting moksham.

'Prapadye' sabdam denotes cognising Bhagavan as protector with complete faith, thus indicating Saadhyopaayam. Here, the prayer is for Bhagavan to stand in place of Bhakti since the Prapanna is incapable of it, and the responsibility of protecting his Aathma is His. It is in present continuous to denote its use during Prapatthi by everyone.



The second part of Dvayam constitutes request for Kainkaryam as phalan and hence the 'Narayana' sabdam here denotes His blissful nature.

'Srimathe' sabdam denotes the inseparable Piraatti being the receiver of Kainkaryam along with Perumal in Vaikuntam, and the import of the word here is 'worshippable'. 'Narayana' sabdam denotes Bhagavan with all His attributes, eternal connection, wealth, and bliss. 'Aaya' sabdam is for requesting Kainkaryam as an outlet for the prapanna's overwhelming affection. 'Nama:' sabdam is for expressing inability, and request for mitigating adverse effects.

The concise meaning of Dvaya mantra is this: "I surrender unto the divine feet of the Master, who is Pure Bliss and inseparable from Piraatti, to get Paripoorna Kainkaryam at all times, all places and all states of being, entitled by my Svarupa, and for all impediments to this be destroyed, and the incapable one that I am, submit the responsibility along with five Angams, of protecting my Aathma unto Your feet.

*(to be continued…)*

**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.



# With Pranams:

**N. Seshadri & Family**

Flat No. 11, Lakshmi, 8/16, Justice Sundaram Road,
Mylapore, Chennai - 600 004.

&

**Kimsuka Narasimhan,**
**S. Narasimhan and Pushpa Narasimhan**

**SVDD thanks N. Seshadri & Family, Kimsuka Narasimhan, S. Narasimhan and Pushpa Narasimhan**

for sponsoring this month's issue of Desika Sandesam





ஆளவந்தார் திருநக்ஷத்ரம்



யஜுர் உபாகர்மா - அத்யயன ஹோமம்







யஜுர் உபாகர்மா - அத்யயன ஹோமம்

